திங்கட்கிழமை 25 செப்டம்பர் 2023 மக்கள் ஓசை Makkal Osai 7

பி.ஆர். ராஜன்

கோலாலம்பூர், செப். 25-

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மறவன்புலவு சச்சி தானத்தின் பெரும் முயற்சியில் திருவாசகத்திலுள்ள 568 பதிகங்களையும் 19 மொழிகளில் மொழிபெயர்ப்பு செய்து மின்னம்பலத் தளத்தில் பதிவேற்றம் செய்யும் பணியை கடந்த 19 ஆண்டுகளாக செய்து வருகிறார்.





தமிழக ஆளுநர் ஆர்.என். ரவியிடம் பாராட்டு சான்றிதழ் பெற்ற மலேசியாவில் 8 கல்வியாளர்கள்

திருவாசகப் பதிகங்களை மலாய்மொழியில் மொழிபெயர்த்த மலேசிய கல்வியாளர்கள்


தமிழ்நாடு ஆளுநர் பாராட்டி கௌரவித்தார்

முனைவர் புஷ்பவள்ளிக்கு திருமுறை திருமகள் விருது சான்றிழை ஆளுநர் ரவி வழங்குகிறார்.

அவரின் தடத்தில் மலேசியாவைச் சேர்ந்த 11 மொழிபெயர்ப்பாளர்கள் 568 திருவாசகப் பதிகங்களையும் மலாய்மொழியில் மொழிபெயர்ப்பு செய்யும் பணியை கடந்த 2018ஆம் ஆண்டு தொடங்கி அண்மையில் நிறைவு செய் துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தக் குழுவுக்கு மலாயாப் பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் சுப்பிரமணி சோனையா தலைமையேற்றார்.

மலாயா பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் முனைவர் திலகவதி கனகரத்தினம், மலாயா பல்கலைக் கழக முன்னாள் விரிவுரையாளர் மன்னர் மன்னன் மருதை, மலாயா பல்கலைக்கழக விரிவுரையாளர் முனைவர் மலர்விழி சின்னையா, மலாயா விரிவுரையாளர் முனைவர் செல்வ ஜோதி ராமலிங்கம், ஆசிரியை முனைவர் பொன்னியம்மா முனியாண்டி, பணி ஓய்வு பெற்ற ஆசிரியர் முனைவர் பார்வதி நல்லியண்ணன், கல்வி அமைச்சின் சிறப்பு கல்வி விரிவுரையாளர் முனைவர் புஷ்பவள்ளி ரெங்கசாமி,



மலேசிய இந்து தர்ம மாமன்றத்தைச் சேர்ந்த சுப்பிரமணி சோனையா ஆளுநர் ரவியிடம் மலேசிய இந்து சமய நூல்களை வழங்குகிறார்.

மலாயா பல்கலைக்கழக முன்னாள் விரிவுரையாளர் முனைவர் கிருஷ்ணன் ராமசாமி, மலாயா பல்கலைக்கழக விரிவுரையாளர் முனைவர் தனலெட்சுமி பெருமாள், மலேசிய கல்வி அமைச் சின் முனைவர் அண்ணாதுரை காசிநாதன் ஆகியோர் இந்த அரும்பணியை மேற்கொண்டனர்.

இந்த அரிய மொழிபெயர்ப்புப் பணியை அறிந்த தமிழ்நாட்டு ஆளுநர் ஆர்.என். ரவி திருவாசகத்தை பல்வேறு மொழிகளில் மொழிபெயர்த்த 50 மொழிப்பெயர்ப்பாளர்களை சென்னைக்கு அழைத்து தம்முடைய அதிகாரப்பூர்வ மாளிகையான ராஜ்பவனிலுள்ள பாரதியார் மண்டபத் தில் கடந்த 23.9.2023இல் பாராட்டி கௌரவித்தார்.

இந்த நிகழ்ச்சியில் மலாய்மொழியில் திருவாசகத்தை மொழிபெயர்த்த மலேசியாவைச் சேர்ந்த 8 கல்வியாளர்கள் கலந்து கொண்டனர். சுப்பிரமணி சோனையா, முனைவர் திலகவதி, மன்னர் மன்னன், முனைவர் மலர்விழி, முனைவர் செல்வ ஜோதி, முனைவர் பொன்னியம்மா, முனைவர் பார்வதி, முனைவர் புஷ்பவள்ளி ஆகியோரே அந்த 8 மலேசிய கல்வியாளர்கள் ஆவர்.

தொடர்ந்து சென்னை, திநகரிலுள்ள வரவேற்பு மண்டபத்தில் மாலை 4.30 மணியளவில் இவர்களுக்கு பாராட்டு நிகழ்ச்சியும் விருதளிப்பும் நடைபெற்றது. தமிழ் அறிஞர்களுடன் சந்திப்புக்கும் ஏற்பாடு செய்யப்பட்டது.

விருது பெற்ற ஒவ்வொருவரும் உரிய அறிமுகத்துடன் தமிழக ஆளுநர் ரவியிடமிருந்து விருது பெற்றனர். இந்த நிகழ்ச்சியில் முனைவர் புஷ்பவள்ளிக்கு 'திருமுறை திருமகள்' எனும் விருதை ஆளுநர் ரவி வழங்கி பாராட்டி வாழ்த்தினார்.

மலேசியத் தமிழ் நாளேடுகளில் முதல் இடம் வகிப்பது

மலேசிய நண்பன்

மக்கள் ஏடு HARIAN TAMIL MALAYSIA NANBAN PP 11862/12/2012

குடும்பம் 40 - நண்பன் 188 / திருவள்ளுவர் ஆண்டு 2055 / குரோதி ஆண்டு / சித்திரை 2 ஹிஜ்ரி 1445 / ஷவ்வால் 6 / திங்கட்கிழமை 15-4-2024 / HARIAN TAMIL MALAYSIA NANBAN சென்னை 1.70

பாரம்பரியத்தை பிரதிபலிக்கும்

தமிழ்ப்புத்தாண்டு



இவ்வாண்டு தமிழ்ப்புத்தாண்டு தலைநகர், பிரிக்பீல்ட்ஸ் லிட்டில் இந்தியாவில் ஒரு வித்தியாசமான கோணத்தில், விமரிசையாக கொண்டாடப்பட்டது. தமிழர்களின் பாரம்பரியங்களை பிரதிபலிக்கும் வகையில் ஏராளமான நிகழ்ச்சிகள், உணவு வகைகள், இன்னிசை நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள், வர்ணம் தீட்டும் போட்டிகள், சிலம்பம், உறுமி மேளம், கரகாட்டம் என களைகட்டியது தமிழ்ப்புத்தாண்டு. தங்கள் திறமைகளை வெளிப்படுத்துவதில் சிறார்கள் ஆர்வமாக வர்ணம் தீட்டும் போட்டியில் கலந்து கொண்டிருப்பதைக் படத்தில் காணலாம்.

(படம்: ஆர்.குணா).











தமிழ்ப்புத்தாண்டு கொண்டாட்டம்:

தழைத்தோங்கியது ஒற்றுமைத் திருநாள்



(செய்தி/படம்: ஆர் குணா)

கோலாலம்பூர், ஏப். 15-

தமிழர்களின் பாரம்பரிய உணவுகள், விளையாட்டுகள், இசைகள் என எல்லா விதமான அற்புதமான நிகழ்ச்சிகளுடன் பிரிக்கீல்ட்ஸ் விட்டில் இந்தியாவில் நேற்று தமிழ்ப்புத்தாண்டு கொண்டாடப்பட்டது. நேற்று மாலை மூன்று மணிக்குத் தொடங்கி மிகவும் கோலாகலமாக அமைந்த இவ்விழாவில் ஆயிரக்கணக்கில் மக்கள் கலந்து கொண்டனர்.

பிரிக்கீல்ட்ஸ் ஆலயங்கள் மற்றும் அதை சார்பற்ற இயக்கங்களின் ஏற்பாட்டில் உணவு மையங்களும் திறக்கப்பட்டிருந்தன. வடை, அதிரசம், கொக்கட்டை, புட்டு, உளுந்து கஞ்சி, பாயாசம் என தமிழர்களின் பாரம்பரிய உணவுகளும் 16 வகை பதார்த்தங்களுடன் வாழை இலை சாப்பாடும் வருகையாளர்களுக்கு பரிமாறப்பட்டது.

கிள்ளான் நாடாளுமன்ற உறுப்பினர் மீ. கணபதி ராவ், தெலுங்கு சங்கத் தலைவர் டத்தோ காத்தாராவ், இந்து மாமன்றத்தின் தலைவர் ராதாகிருஷ்ணன், டத்தோ என்.எஸ். ராஜேந்திரன், இந்து சங்கத்தலைவர் ஆகியோர் உள்ளிட்ட பலரும் இதில் கலந்து சிறப்பித்தனர்.

நேற்று இங்கு பிரிக்கீல்ட்ஸ் வட்டாரத்தில் தமிழ்ப்புத்தாண்டு விழா ஒரு இமாலய வெற்றியாக உருமாற்றம் பெற்று எனலாம் மிகையாகாது. மலேசிய இந்து தர்ம மாமன்றம், ருக்குன தெத்தாங்கா பிரிக்கீல்ட்ஸ், பிரிக்கீல்ட்ஸ் வணிக சமூக சங்கம், 40 க்கும் மேற்பட்ட சமய சமூக இயக்கங்கள், ஆலயங்கள், ஆசிரமங்கள், குருக்கள்மார்கள், வணிகப் பெருமக்கள் அனைவரும் இணைந்து கொண்டாடிய மாபெரும் தமிழ்ப்புத்தாண்டு இது.

தமிழ்ப்புத்தாண்டு விழா ஒருங்கிணைப்பாளரும் மலேசிய இந்து தர்ம மாமன்றத்தின் துணை தேசியத் தலைவர் சிவகுமார் வடிவேலு இவ்விழாவின் சிறப்புகளை எடுத்துரைத்தார்.

பிரிக்கீல்ட்ஸ் வட்டாரமே புத்தாண்டு விழா கோலம் பூண்டது. பார்ப்போரும் தமிழர் ஒற்றுமையினை பறைசாற்றுவதாக இருந்தது.

நேற்று இரண்டு மணியிலிருந்து புத்தாண்டு விழாவிற்கு மக்கள் கூட்டம் திரண்டு வர துவங்கியது. ஐந்தாவது வருடமாக நடத்தப்பட்டு வரும் விழா இது. சிலம்பம், உறுமி மேளக் கச்சேரி, உறி அடித்தல், கோலப் போட்டிகள், பாரம்பரிய நடனங்கள், பாரம்பரிய விளையாட்டுகள் ஆகிய அம்சங்களால் தமிழ்ப்புத்தாண்டு விழா தழைத்தோங்கியது.

உறுமி மேள படைப்பு, சிலம்பம் படைப்பு, பாரம்பரிய நடனப் படைப்பு ஆகிய படைப்புகள் புத்தாண்டு விழாவிற்கு முத்தாய்ப்பு வைத்தன. கபடி விளையாட்டின் வெற்றியாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.


இசைக் கச்சேரி


வருகையாளர்கள்


பரதநாட்டியம்


சிலம்பம்


வணங்கி வரவேற்கும் பெண்கள்


பெரியவர்களுக்கான போட்டி


உணவு பரிமாறத் தயார்


மயில் நடனம்


கலைத்துப் பாருங்கள்


வெற்றியாளர்களுக்குப் பரிசுகள்


கோலம் வரைதல்




பொதுமக்களில் ஒரு பகுதியினர்

MALAYSIA NANBAN Published by Penerbitan Sahabat (M) Sdn. Bhd. (157000-T) No.544-1, Batu Complex off Jalan Ipoh Batu 3½, 51200 Kuala Lumpur Tel : 03-62515981 Editorial (Fax) 03-62591617 E-mail: mnanban12@gmail.com